செய்தி வெளியீடு எண்: 530 நாள்:26.08.2019

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (26.8.2019) தலைமைச் செயலகத்தில், வேளாண்மைத் துறை சார்பில், 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தக்காளியை பதப்படுத்தி, மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை தயாரிக்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்ட 5 வாகனங்களை விவசாயப் பெருமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் 1198 ஹெக்டர் பரப்பளவில் சுமார் 5 லட்சத்து 35 ஆயிரத்து 273 மெட்ரிக் டன் தக்காளி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தக்காளி அதிகமாக விளையும் பருவங்களில் விலை வீழ்ச்சி ஏற்பட்டு, குறைந்த விலையில் விற்கக்கூடிய நிலைமை விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு, தக்காளியை பண்ணை அளவில் மதிப்புக் கூட்டி விற்பனை செய்து பயன்பெறும் வகையில், 2017–18ஆம் ஆண்டுக்கான தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்ட நிதியின் கீழ், தலா 40 லட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான தக்காளியை பதப்படுத்தி, மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை தயாரிக்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்ட 5 வாகனங்கள் தஞ்சாவூரில் உள்ள இந்திய உணவு பதப்படுத்துதல் தொழில்நுட்ப நிறுவனத்தால் கட்டமைப்பு செய்யப்பட்டுள்ளன.

இந்த வாகனங்கள் நேரடியாக விவசாயிகளின் தக்காளிப் பண்ணைக்கே எடுத்துச் செல்லப்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த வாகனங்களில் உள்ள பதப்படுத்தும் இயந்திரங்கள் மூலம், தக்காளியை மட்டுமல்லாது பப்பாளி, கொய்யா, திராட்சை மற்றும் மாம்பழம் ஆகிய பழங்களையும் பதப்படுத்தி, அதன் சாறுகளைக் கொண்டு மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை தயாரிக்கும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளன.

இந்த வாகனங்களில், மூன்று வாகனங்கள் கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர் மற்றும் தருமபுரி மாவட்ட உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு குத்தகை அடிப்படையிலும், ஒரு வாகனம் தஞ்சாவூர் டெல்டா பாசன விவசாயிகள் பயன்பெறும் வகையில் இந்திய உணவு பதப்படுத்துதல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் மற்றும் ஒரு வாகனம் தமிழ்நாட்டின் பிறமாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறைக்கும் வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் திரு.எஸ்.ஜே.சிரு, இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ந.சுப்பையன், இ.ஆ.ப., இந்திய உணவு பதப்படுத்தும் தொழில்நுட்ப நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் சி. அனந்தராமகிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 26.8.2019